**வென்னப்புவ பிரதேச சபை - 2024**

------------------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

வென்னப்புவ பிரதேச சபையின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமைக் கூற்று அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, தேறிய சொத்துக்களில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுக்குரிய தகவல்களையும் உள்ளடக்கிய நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்களுடன் கூடிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 172(1) உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10(1) உப பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் வென்னப்புவ பிரதேச சபையின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)**

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி பிரதேச சபை உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் குறிப்பிடப்பட்ட தேவைகள் தொடர்பான விசேட ஏற்பாடுகள் உள்ளடங்கியுள்ளது.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் வென்னப்புவ பிரதேச சபையின் நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாக உள்ளது.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்டிருந்த பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடங்கியுள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சபைக்குச் சொந்தமாகக் காணப்படுகின்ற 28 காணிகளின் பெறுமதி மதிப்பீடு செய்து கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | சகல காணிகளுக்கான பெறுமதியினைப் பெற்றுக் கொள்வதற்கு மதிப்பீட்டுத் திணைக்களத்திற்கு அனுப்புவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. அந்த நடவடிக்கைகள் முடிவடைந்தவுடன் ஆண்டின் கணக்குகளில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சகல சொத்துக்களும் கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | சபைக்குச் சொந்தமான 45 காணிகள் ரூபா 500 இனை விட குறைந்த பெறுமதியில் நீண்ட காலமாக கணக்கீடு செய்யப்பட்டதுடன் தற்போதைய பெறுமதியின் பிரகாரம் அந்த காணிகள் மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்யப்படவில்லை. | நீண்ட காலமாக மிகவும் குறைந்த பெறுமதி காண்பிக்கப்பட்டுள்ள காணிகளுக்காக புதிய பெறுமதியைப் பெற்றுக் கொள்வதற்கு மதிப்பீட்டு திணைக்களத்திற்கு அனுப்புவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. இந்த காணிகளில் குறிப்பிடப்பட்டுள்ள சில பகுதிகள் பொதுக் கிணறுகளாக இருந்ததுடன் அவற்றில் சில காணிகளை கூறுகளாக்கும் போது ஒதுக்கப்பட்டுள்ள வீதிகளும் உள்ளடக்கப்பட்டுள்ளது. | காணிகளை குறித்துரைத்தவாறு இனங்கண்டு மதிப்பீடு செய்து கணக்கீடு செய்தல் வேண்டும். |
| (இ) | கடந்த ஆண்டிலும், மீளாய்வாண்டிலும் வேலைகள் பூர்த்தி செய்யப்பட்ட ரூபா 43,724,324 ஆன 17 வேலைகளின் பெறுமதி மூலதனமாக்கப்பட்டிருக்க வில்லை. | 2025 ஆம் ஆண்டுக்குரிய நிதிக் கூற்றுக்களின் மூலம் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | வேலைகள் பூர்த்தி செய்யப்பட்ட நிர்மாணங்களின் பெறுமதி மூலதனமாக்கப்படல் வேண்டும். |
| (ஈ) | மீளாய்வாண்டில் முதலீடு செய்யப்பட்டிருந்த 02 நிலையான வைப்புக்களுக்கு உரிய வட்டி ரூபா 567,123 கணக்கீடு செய்யப்பட்டிருக்க வில்லை. | இந்தப் பெறுமதி எதிர்வரும் ஆண்டின் நிதிக்கூற்றுக்களின் மூலம் திரண்ட நிதியத்தில் சீராக்கி நாட்குறிப்புக்களின் மூலம் கணக்குகளில் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | வட்டி கணிப்பிடப்பட்டு கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |
| (உ) | மீளாய்வாண்டில் நிர்மாணிக்கப்பட்ட சூரிய கல முறைமையின் பெறுமதி ரூபா 23,102,327 மற்றும் விற்பனை செய்யப்பட்ட வாகனங்களின் பெறுமதி ரூபா 1,750,000 மூலதனத்திற்கான வருமானப் பங்களிப்புக் கணக்கிலும், மீளாய்வாண்டில் ஏலத்தில் விற்பனை செய்யப்பட்ட ரூபா 754,190 ஆன உடைந்த பொருட்களின் மூலதனத்திற்கான வருமானப் பங்களிப்புக் கணக்கிலும் மற்றும் நடைமுறையல்லாச் சொத்துக் கணக்கிலும் சீராக்கப்பட்டிருக்கவில்லை. | சூரியகல முறைமைக்குரிய நிர்மாணங்கள் எதிர்வரும் ஆண்டின் போது கணக்குகளின் மூலம் மூலதனம் ஆக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் விற்பனை செய்யப்பட்ட வாகனங்கள் மீளாய்வாண்டின் போது அகற்றும் கணக்கில் சீராக்கப்பட்டுள்ளதுடன் மூலதனப் பங்களிப்பிற்கு நாட்குறிப்பின் மூலம் எதிர் வரும் ஆண்டின் போது கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சரியாக கணக்குகள் தயாரிக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஊ) | பெறுமதி ரூபா 13,990,000 ஆன இயந்திரங்கள் மற்றும் 03 உபகரணங்கள் நடைமுறையல்லாச் சொத்தாக கணக்கீடு செய்யப்படாமல் இருந்ததுடன் மீளாய்வாண்டின் போது நிர்மாணிக்கப்பட்ட சூரியகல முறைமையின் பெறுமதி ரூபா 5,544,559 நடைமுறையல்லாச் சொத்தாக குறைத்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | ரூபா 13,990,000.00 ஆன இயந்திரம் மற்றும் உபகரணங்கள் 2023 ஆம் ஆண்டின் போது சூரியகல முறைமைக்காக செலவிடப்பட்ட ரூபா 5,544,559.00 பெறுமதி நடைமுறையல்லாச் சொத்தாக 2025 ஆம் ஆண்டின் போது கணக்குகளில் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சரியாக கணக்குகள் தயாரிக்கப்படல் வேண்டும். |

### 1.6.2 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு 12 கணக்கு விடயங்களின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் ஆன மீதிக்கும் பட்டோலைகளின் பிரகாரமான மீதிக்கும் இடையே ரூபா 48,339,502 வேறுபாடு காணப்பட்டது. | வேறுபாடுகளைக் கண்டறிந்து எதிர் வரும் ஆண்டின் போது சீராக்கப்படும். | இணங்காமைகளுக்கான காரணங்களை பரீட்சித்து கணக்குகறைச் சரி செய்தல் வேண்டும். |

## 1.7 இணங்காமைகள்

### 1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவவ தீர்மானங்களுடன் இணங்காமை சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | | | |
| 571(2) | இரண்டு வருடங்களை விஞ்சிய ரூபா 4,406,742 ஆன வைப்புக்கள் தொடர்பாக நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இரண்டு வருடங்களை விஞ்சிய வைப்புக்களை வருமானத்திற்கு எடுப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது. | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2024 திசம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 63,803,368 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 127,946,180 ஆகும்.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

செயலாளரால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கும், முன்னைய ஆண்டிற்கும் உரியதாக சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | | 2024 | | | | 2023 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமானமான மூலம் | மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை | மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை |
| | | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 |
| i. | ஆதன வரியும் வரியும் | 27,277 | 30,658 | 27,930 | 11,047 | 17,965 | 18,998 | 15,859 | 7,052 |
| ii. | வாடகை | 35,390 | 39,331 | 39,563 | 2,765 | 30,027 | 35,649 | 35,537 | 2,856 |
| iii. | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 5,260 | 6,009 | 6,009 | 479 | 4,065 | 5,087 | 5,087 | 479 |
| iv. | ஏனைய வருமானம் | 16,817 | 25,676 | 26,675 | 503 | 19,445 | 21,100 | 13,945 | 1,502 |
| | மொத்தம் | 84,744 | 101,674 | 100,177 | 14,794 | 71,502 | 80,834 | 70,428 | 11,889 |

#### 2.2.2 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

சபையின் வருமான சேகரித்தலின் செயலாற்றல் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) கடந்த ஆண்டின் நிலுவை வருமானம் மற்றும் மீளாய்வாண்டில் சிட்டையிடப்பட்ட வருமானங்கள் சேர்ந்து மீளாய்வாண்டில் சேகரிக்கப்பட்ட வருமானம் கழிக்கப்பட்ட பின்னர் மீளாய்வாண்டின் இறுதியில் நிலுவை வருமானத்திற்கு சமமாக இருக்க வேண்டியிருந்த போதிலும் வருமானம் தொடர்பாக | எதிர்காலத்தில் உரிய வேறுபாடுகளை சரி செய்து சமர்ப்பிக்கப்படும். | வருமானம் தொடர்பாக சரியான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் அந்த எண்ணிக்கைகளுக்கு இடையே பரஸ்பர வேறுபாடு காணப்பட்டது. | | |
| **(ஆ) ஆதனவரி** | | |
| 2025 மார்ச் 31 இல் உள்ளவாறு ஆதனவரி நிலுவை மீதி ரூபா 8,996,091 ஆக இருந்ததுடன் அந்த நிலுவையில் 01 வருடத்திற்கு மேற்பட்ட 05 வருடங்களுக்கு குறைந்த ரூபா 1,498,701 நிலுவை மீதியும், 05 வருடங்களுக்கு மேற்பட்ட ரூபா 1,408,045 நிலுவை மீதியும் காணப்பட்டது. | வருமானப் பரிசோதகர் உத்தியோகத்தர் பதவிகள் 05 வெற்றிடமாகக் காணப்பட்டதால் நிலுவை வருமானத்தை சேகரிப்பதில் தாமதம் ஏற்பட்டது. | நிலுவை வருமானத்தை விரைவாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| **(இ) வாடகை** | | |
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவைக் கடை வாடகை ரூபா 2,764,900 ஆக இருந்ததுடன் அதில் 05 வருடங்களுக்கு மேற்பட்ட நிலுவை வாடகை ரூபா 1,021,259 ஆகும். | இந்த நிலுவைத் தொகையில் அறவிட முடியாது காணப்படுகின்ற ரூபா 752,209.94 தொகையை பதிவழிப்பதற்கு ஆளுநரின் அங்கீகாரத்திற்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளதுடன் மிகுதி தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிலுவை கடை வாடகையை விரைவாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 2.2.3 மிகைக் கட்டணம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 172(3) ஆம் பிரிவின் பிரகாரம் பொறுப்பு வாய்ந்த தரப்பினருக்கு எதிராக வடமேல் உள்ளூராட்சி ஆணையாளரின் 2018 பெப்ரவரி 15 ஆம் திகதிய இலக்கம் வ.ப.பா.தே. 02/09/01/01கி.கா2006 என்ற கடிதத்தின் பிரகாரம் ரூபா 326,355 அறவிடுவதற்கு இருந்த தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை. | மிகைக் கட்டணத்தை அறவிடுவதற்காக நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | மிகைக் கட்டணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

பிரதேச சபைகள் சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

## 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | வென்னப்புவ வாராந்த சந்தை 2001 ஆம் ஆண்டுக்காக வாடகைக்கு வழங்கிய வாடகையாளர்களிடம் இருந்து அறவிட வேண்டி இருந்த நிலுவைத் தொகை ரூபா 1,157,173 இனை அறவிடுவதற்காக 2003 ஆம் ஆண்டில் வழக்கு ஒன்று தொடரப்பட்டதுடன் வாடகைக்கு வழங்குவதற்கு உரியதாக கைச்சாத்து இடப்பட்ட உடன்படிக்கை செல்லுபடி இல்லாது இருந்ததாக தீர்ப்பு செய்யப்பட்டு 16 வருடங்களின் பின்னர் 2019 ஆம் ஆண்டின் போது வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டிருந்தது. இது தொடர்பாக மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட பின்னர் 2023 ஆம் ஆண்டின் போது மேன்முறையீடும் தள்ளுபடி செய்யப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் இந்த நிலுவைத் தொகையை வாடகையாளரிடம் இருந்து அறவிடுவதற்கு சபைக்கு முடியாது இருந்ததுடன் செல்லுபடியான உடன்படிக்கை இன்றி வாராந்த சந்தை வாடகைக்கு வழங்குதல் தொடர்பாக பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தரிடம் இருந்து நிலுவை வாடகைத் தொகை மற்றும் சபையினால் செலுத்தப்பட்ட வழக்குக் கட்டணங்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வென்னப்புவ வராந்த சந்தை 2001 ஆம் ஆண்டிற்காக வாடகைக்கு வழங்கிய பின்னர் நிலுவை வாடகையை பெற்றுக்கொள்ளல், வழக்கு நடவடிக்கைகள் முடிவடைந்த பின்னர் எடுக்க வேண்டிய மிகுதி நடவடிக்கைகள் தொடர்பான ஆலோசனைக் கடிதம் உள்ளூராட்சித் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. | பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர்களைத் தீர்மானித்து நிலுவை வாடகைத் தொகை மற்றும் வழக்கு கட்டணங்களை அறவிடப்படல் வேண்டும். |
| (ஆ) | 2011 திசெம்பர் முதல் வென்னப்புவ பல்நோக்கு கூட்டுறவுச் சங்கத்தினால் வென்னப்புவ வர்த்தக கட்டிடத் தொகுதியில் கோப் சிட்டி கடை சட்ட ரீதியான உடன்படிக்கையில் கைச்சாத்திடப்படாமல் நடாத்திச் செல்லப்படுவதுடன் ஆரம்பத்தில் இருந்து எந்தவொரு வாடகையும் செலுத்தப்பட்டிருக்கவில்லை. மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 1,218,150 நிலுவைத் தொகை அறவிட வேண்டியிருந்ததுடன் சட்ட ரீதியான உடன்படிக்கை காணப்படாமையின் காரணமாக சட்ட ரீதியான நடவடிக்கைகளை எடுக்க முடியாத நிலைமையில் காணப்பட்டது. | கோப் சிட்டி கடைகள் மூலம் வென்னப்புவ பிரதேச சபைக்கு வாடகை வழங்காமையின் காரணமாக அந்தக் காணியின் உரித்து வென்னப்பு பிரதேச சபைக்குச் சொந்தமாக இருந்தமையால் விடுவிக்கும் கட்டளை ஒன்றைப் பெறும் வகையில் சட்ட ரீதியான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. | நிலுவை வாடகைத் தொகையை அறவிடுவதற்கும் உரித்தினை கையேற்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | 2021 – 2023 காலத்தில் காணிகளைக் கூறுகளாக்குவதற்காக அங்கீகாரம் பெற்றுக்கொள்ளாமல் 05 காணிகள் கூறுகளாக்கப்பட்டு விற்பனை செய்யப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் சபை அதிகாரப் பிரதேசத்தில் அமைந்துள்ள காணிகள் அங்கீகாரம் இன்றி விற்பனை செய்யப்பட்டிருந்தமையும் அது தொடர்பாக சபையின் பின்தொடர் நடவடிக்கைகள் மற்றும் காணி கூறுகளாக்குதல் தொடர்பாக சபையினால் நடவடிக்கைகள் எடுத்தல் நலிவான மட்டத்தில் காணப்படுகின்றமையும் அவதானிக்கப்பட்டதுடன் அதன் காரணமாக பொது வசதிகளுக்காக பெற்றுக் கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்ட காணிப் பகுதிகள் மற்றும் காணி விற்பனையின் அடிப்படையில் அறவிட வேண்டிய வரித் தொகை சபைக்கு இழக்கப்பட்டிருந்தது. | விடுவத்தல் பரிந்துரையில் நகர அபிவிருத்தி அதிகார சபையில் இருந்து பெற்ற சமர்ப்பிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. | அதிகாரப் பிரதேசத்தில் காணிகள் கூறுகளாக்குதல் தொடர்பாக உரிய மேற்பார்வை மற்றும் பின்தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். |
| (ஈ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு செலுத்த வேண்டிய 03 கணக்கு விடயங்களில் 164,134,411 மீதியாக இருந்ததுடன் அதில் 01 வருடத்திற்கும் 05 வருடங்களுக்கும் இடையில் ரூபா 46,637,321 மீதியும் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு செலுத்த வேண்டிய கணக்கு மீதிகள் தற்போது தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | செலுத்த மீதிகளைத் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (உ) | 2017 ஆம் ஆண்டு முதல் மீளாய்வாண்டு வரை நிதிக்கூற்றுக்களில் பிற்போட்ட ரீதியில் அறவிட வேண்டிய 08 விடயங்களில் ரூபா 27,175,869 மீதியை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பிற்போட்ட ரீதியில் அறவிட வேண்டிய மீதிகளை தீர்த்து வைப்பதற்கு எதிர் வரும் ஆண்டின் இறுதிக் கணக்குகள் தயாரிப்பதற்கு முன் நடவடிக்கை எடுக்கப்படும். | பிற்போட்ட ரீதியில் அறவிட வேண்டிய மீதிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**3.2 மனிதவள முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சபையின் மூன்றாம் தரத்தில் பதவியொன்று மற்றும் இரண்டாம் தரத்தில் 06 பதவிகள் வெற்றிடமாகக் காணப்பட்டதுடன் ஆரம்ப தரத்தில் 66 உத்தியோகத்தர்களின் மிகை காணப்பட்டது. மேலும் சிரேஸ்ட | வெற்றிடமாகக் காணப்படுகின்ற பதவிகளுக்காக பல வருடங்களில் இருந்து கோரப்பட்ட போதும் வெற்றிடங்கள் நிரப்பப்படாது இருந்ததுடன் புதிய பதவியணியினரை மீளாய்வு | வெற்றிடப் பதவிகளை நிரப்புவதற்காகவும் மிகையான பதவிகளை அங்கீகரித்துக் கொள்வதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பதவியான ஆயுர்வேத மருத்துவர் பதவிக்காக வைத்தியர் ஒருவர் ஒப்பந்த அடிப்படையில் 10 வருடங்கள் அளவிலான காலம் முதல் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தார். | செய்து இது தொடர்பாக கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதுடன் மிகை ஆயுர்வேத உத்தியோகத்தர் பதவி நிரந்தர ஆயர்வேத உத்தியோகத்தர் விடுமுறையில் செல்கின்ற சந்தர்ப்பங்களின் போது ஈடுபடுத்துவதற்கும் மற்றும் சபையின் அங்கீகரிக்கப்பட்ட சுகாதார மற்றும் வேலைத் தொழிலாளர் பதவிகளின் எண்ணிக்கை போதியளவில் இல்லாமையினால் மிகை ஊழியர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். | |
| (ஆ) | சேவையை விட்டுச் சென்ற மற்றும் ஓய்வு பெற்றுச் சென்ற 18 உத்தியோகத்தர்களிடம் இருந்து மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் அறவிட வேண்டிய ரூபா 778,341 தொகையில் ரூபா 697,721 தொகை அதாவது 90 சதவீதத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | சேவையை விட்டுச் சென்ற உத்தியோகத்தரிடம் இருந்து அறவிட வேண்டிய கடன் மீதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிலுவை கடன் மீதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 சுற்றாடல் பிரச்சினைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபை அதிகாரப் பிரதேசத்தில் சேகரிக்கப்படுகின்ற கழிவுகளை அகற்றுவதற்காக ஸ்தாபிக்கப்பட்ட இரண்டு நிலையங்களில் ஒரு நிலையத்திற்காக சுற்றாடல் அனுமதிப் பத்திரம் வழங்கப்பட்டிருக்கவில்லை. | செந்திரியாமுல்ல கூட்டுப்பசளைத் தளத்திற்கு சுற்றாடல் அனுமதிப் பத்திரத்தைப் பெற்றுக் கொள்வதற்காக நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | கூட்டுப் பசளைத் தளத்திற்காக சுற்றாடல் அனுமதிப் பத்திரம் பெறப்படல் வேண்டும். |

**4.2 நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| சபையினால் நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் 08 இனங்காணப்பட்டு அந்த நோக்கங்களை அடைந்து கொள்ளும் 56 நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் செயற்பாடுகள் 2024 ஆம் ஆண்டில் அமுல்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. அதில் 98 சதவீத அளவிலான செயல் முன்னேற்றம் ஆண்டில் கைப்பற்றப்பட்டிருந்தது. | 17 நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை நிறைவேற்றுவதற்காக பிரதேச சபையின் வருடாந்த பாதீட்டின் மூலம் நிதியேற்பாடு ஒதுக்கி நிகழ்ச்சித் திட்டம் அமுல்படுத்தப்பட்டதுடன் 2030 ஆம் ஆண்டின் போது எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களை அடைந்து கொள்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. | இனங்காணப்பட்ட நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைந்து கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |